**நாள்**: 27.10.2025

**O.S. No. 33/2021**

**பி.வா.சா.1**

**பெயர்: துரைராஜ், த/பெ. ராமாசாமி**

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

நான் என்ன வேலையில் இருந்தேன் என்றால் அரசு விரைவு போக்குவரத்து கழகம் நாகப்பட்டினம் கிளையில் பிரவு அலுவலராக பணியிலிருந்து கடந்த 30.04.2006 ம் ஆண்டு ஓய்வு பெற்றுள்ளேன். நான் தாவா சொத்தை கிரயம் பெற்ற வா.சா.ஆ. 1 ஆவணத்தின் 7 செண்ட் நஞ்சை என்று தான் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 கிரய ஆவணத்தில் சொத்திற்கு நீள அகல விபரம் நான்கு திசைகளுக்கும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணத்தில் கிரய சொத்தின் நான்கெல்லையாக ராஜகோபாலன் கிரயம் பெறும் நஞ்சைக்கு கிழக்கு, ராஜமாணிக்கம் கிரயம் பெறும் நஞ்சைக்கு மேற்கு, ராலலெட்சுமி கிரயம் பெறும் நஞ்சைக்கு தெற்கு, சீதாராமன் கிரயம் பெறும் நஞ்சைக்கு வடக்கு என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரையில் தாவா சொத்தின் நான்கெல்லை குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 கிரய ஆவணத்தில் கண்ட நான்கெல்லையை வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ. 1 ஆவணத்தில் நீள அகல அளவீடுகள் குறிப்பிடப்படாமல் கிரயம் பெற்றுள்ள நிலையில் எதன் அடிப்படையில் வழக்குரையில் தாவா சொத்தின் நீள அகலம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வேயர் மூலம் அளந்து அதன்பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் அளவீடு செய்ததாக சொல்லுவது வா.சா.ஆ. 6 அடிப்படையில்தான் என்றால் சரியல்ல. 2017 லும் அதற்கு முன்னரும் பலமுறை அளவீடு செய்துள்ளேன். வா.சா.ஆ. 6 ஏற்பட்ட 2019 க்கு முன்னர் தாவா சொத்தை அளவீடு செய்ததற்கான ஆதரவாக ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சுனாமியின் போது ஆவணங்கள் காணாமல் போய்விட்டது. 2004 ல் சுனாமி ஏற்பட்ட நிலையில் 2017 ல் தாவா சொத்தை அளவீடு செய்ததற்கான ஆவணங்கள் காணாமல் போய்விட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஞாபகம் இல்லை. 1ம் பிரதிவாதி தாவா

சொத்தை ஆக்கிரமிப்பு செய்த விபரத்தை நான் எப்போது தெரிந்துகொண்டேன் என்றால் 2017 ல் தெரிந்துகொண்டேன். 2017 ல் ஆக்கிரமிப்பு குறித்து தெரிந்துகொண்ட நிலையில் 2021 வரை காத்திருக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது என்றால் கோவிட் பெருந்தொற்று இருந்ததால் காத்திருக்கவேண்டியிருந்தது.

வா.சா.ஆ.1கிரய ஆவணம் ஏற்பட்ட போது நான் அளந்து வாங்காத காரணத்தால் தான் வா.சா.ஆ. 1 ஆவணத்தில் நீள அகல அளவு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நான் வா.சா.ஆ. 1 கிரய ஆவணத்தில் பிரிபடாத புலஎண் 37/1 ல் உள்ள பூரா விஸ்தீரணம் 1 ஏக்கர் 58 செண்டில் 7 செண்ட் மட்டும் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி பூரா 1 ஏக்கர் 58 செண்டில் நான் கிரயம் பெற்ற 7 செண்ட் எந்த பகுதியில் அமைந்துள்ளது என்பது குறித்து வா.சா.ஆ. 1 கிரய ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 கிரய ஆவணத்தில் அன்றைய தேதியில் நான்கெல்லை சொத்துகளின் உரிமையாளர்கள் குறித்தும் அதன் புலஎண் குறித்தும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 கிரய ஆவணத்தில் கிரய சொத்தின் நான்கெல்லையாக குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் அந்தந்த சொத்துகளை கிரயம் பெற்று அனுபவித்து வரவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி நான்கெல்லை சொத்துகளின் உரிமையாளர்களின் ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

வா.சா.ஆ. 1 கிரய ஆவணத்தில் கண்ட புலஎண் 37/1 ல் நான் கிரயம் பெற்ற 7 செண்ட் எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் அது குறித்து நினைவில்லை.UDR Scheme ஏற்பட்டபோது 1986 ல் உட்பிரிவானது. வா.சா.ஆ. 2 கிரய ஆவணத்தில் கண்டுள்ள தேதியான 17.07.2017 தேதியில்தான் புலஎண் 37/1L ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த தேதியில் நாங்கள் நகல் பெற்றோம். மேற்படி புலஎண் 37/1L எப்போது உட்பிரிவானது என்பதற்கான ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நினைவில்லை. நான் கூறுவது போல் UDR Scheme ல் புலஎண் 37/1L உட்பிரிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

நான் கிரயம் பெறும் போது தாவா சொத்தின் வடபுறத்தில் சாலை எதுவும் இல்லை என்றால் நினைவில்லை. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் கிரய சொத்திற்கு

வடக்கே சாலை என்று காட்டப்படவில்லை என்றாலும் வா.சா.ஆ. 1 ஆவணத்தில் வடக்கே சீதாராமன் நஞ்சை என்று காட்டப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். தற்சமயம் தாவா சொத்தின் வடக்கே கீழகாவாதுகுடி பஞ்சாயத்தால் சாலை அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்தின் வடக்கே உள்ள சாலையின் அகலம் எவ்வளவு என்றால் சுமார் 15 அடி இருக்கும். மேற்படி சாலைக்கு வடக்கே சீதாராமன் வீடு உள்ளது என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற வா.சா.ஆ. 1 கிரய சொத்திற்கு சீதாராமன் நஞ்சை உள்ள நிலையில் தற்போது உள்ள சாலை எவ்வாறு அமையப்பெற்றது என்றால் பஞ்சாயத்திடம்தான் கேட்கவேண்டும். மேற்படி பஞ்சாயத்தை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஆக்கிரமிப்புதாரருக்கு எதிராக மட்டும்தான் இவ்வழக்கு தாக்கல்செய்துள்ளேன். மேற்படி சீதாராமன் நான் கிரயம் பெற்ற கிரயதாரரான ராஜேஸ்வரியிடம் இருந்துதான் அவர் கூறிய சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. எனக்கு கிரயம் செய்துகொடுத்த ராஜேஸ்வரி புலஎண் 37/1ல் உள்ள 1 ஏக்கர் 58 செண்டை பலநபர்க்கு விற்பனை செய்துகொடுத்துள்ளார் என்றால் எனக்கு விற்பனை செய்து கொடுத்தது மட்டும்தான் எனக்கு தெரியும். மேற்படி ராஜேஸ்வரி 1 ஏக்கர் 58 செண்டில் உள்ள நிலத்தை செண்ட் கணக்கில் பல நபர்களுக்கு துண்டுதுண்டாக விற்பனை செய்துவிட்ட பிறகே சாலை அமைக்கப்பட்டது என்றால் சாலை அமைக்கப்பட்ட பிறகே நான் கிரயம் பெற்றேன். நான் கிரயம் பெற்றபோது சாலை அமைக்கப்படவில்லை என்றாலும் அவ்வாறு அமைக்கப்பட்ட பிறகு தான் கிரயம் பெற்றதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாலை அமைப்பதற்காக ஜெயலெட்சுமி விற்பனை செய்த நபர்களிடமிருந்து நிலம் கையகப்படுத்தப்பட்டு பஞ்சாயத்தால் சாலை அமைக்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் ரோட்டிற்காக நிலம் எடுக்கப்பட்டதா என்றால் சரிதான். ரோட்டிற்காக நிலம் எடுக்கப்பட்ட பிறகு வா.சா.ஆ. 1 ல் கண்ட கிரய சொத்தின் விஸ்தீரணமான 7 செண்ட்டிற்கும் குறைவாகத்தான் இருக்கும் என்றால் சரிதான். தாவா சொத்தின் விஸ்தீரணமான 250 ச.மீ எனக்கு அளவீடு செய்து பத்திரம் எழுதித்தரப்படவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி புலஎண் 37/1 ல் கிரயம் பெற்ற கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகலை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்(வா.சா.ஆ. 4). எனது கிரய முன்னவரான ராஜேஸ்வரியிடமிருந்துதான் 1ம் பிரதிவாதியின் கிரயம் முன்னவர் ராஜகோபாலன்

கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி 1ம் பிரதிவாதியின் கிரய ஆவணமான வா.சா.ஆ. 4 ஆவணத்திலும் சாலை குறித்து காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வா.சா.ஆ. 4 ஆவணம் மூலம் கிரயம் பெற்ற 7 செண்டில் தற்போது 5 செண்டிற்கு மட்டும்தான் அனுபவம் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 4 ஆவணம் மூலம் கியரம் பெற்ற சொத்தில் 1ம் பிரதிவாதி கடந்த 2000 ஆண்டிலேயே வீடு கட்டிவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. எந்த ஆண்டு நான் தாவா சொத்தில் கம்பிவேலி அமைத்தேன் என்றால் உத்தேசமாக 1992ம் ஆண்டு கம்பிவேலி அமைத்தேன். எப்போது நான் வைத்த கம்பிவேலியை 1ம் பிரதிவாதி அகற்றியதாக கூறுகிறேன் என்றால் 1996ம் ஆண்டிலிருந்து கம்பிவேலயை நகற்றி வந்தார். நான் சரிசெய்து தர கேட்டுவந்தேன். நான் சரிசெய்து வைத்து வந்தால் மீண்டும் நகற்றிவிடுவார்கள். 2005ல் 1ம் பிரதிவாதி வீடு கட்டிவந்தார். 2005 ல் 1ம் பிரதிவாதி வீடு கட்டியபோது காம்பொண்ட் சுவர் எழுப்பட்டிருந்ததா என்றால் இல்லை. அப்போது ஆக்கிரமிப்பும் இல்லை. 1ம் பிரதிவாதி 2005 ல் லேயே அனுமதி பெற்று வீடு கட்டி சுற்று சுவர் எழுப்பி அவர்குரிய சொத்தில் அனுவம் செய்து வரும் நிலையில் தற்போது ஆக்கிரமித்துவிட்டதாக பொய்யாக வழக்குதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.**

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.10.27 17:34:42 +0530